NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p4
**Date:** 8 October 2021

# செயற்கை உறுப்புகளை மேம்படுத்தும் ஆய்வுக்குப் புது நிலையம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில், செயற்கை உடல் உறுப்பு தயாரிப்பில் செயல்படக்கூடிய செயற்கை நுண்ணறிவு குறித்த ஆய்வில் கவனம் செலுத்தும் புது நிலையம் ஒன்றை கல்வி அமைச்சர் சான் சுன் சிங் நேற்று திறந்துவைத்தார்.

அடுத்த 10 ஆண்டுகளுக்குக் கல்வி அமைச்சும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கியுள்ள $200 மில்லியன் நிதியோடு, அந்நிலையம் செயல்படக்கூடிய செயற்கை நுண்ணறிவு குறித்த கண்டுபிடிப்புகளை நோக்கி செயல்படும்.

செயல்படக்கூடிய செயற்கை நுண்ணறிவு, சுற்றுச் சூழல்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளும் தன்மையும் நினைவாற்றலும் கொண்டவை. இதைப் போன்ற ஐந்து நிலையங்கள் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்திலும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்திலும் 2007லிருந்து 2011 வரை நிறுவப்பட்டன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.